தமிழ்
புதிய பாடத்திட்டம்
தென்னிந்திய இலக்கிய வரலாறு
சோழர் காலம்

எஸ்.எஸ்.ஜீவன் (வினாத்தாள் திருத்துனர், பி. பரீட்சகர் –பரீட்சை திணைக்களம்)
B.Ed (Hons) In Tamil, M.Ed (R), SLTS(2.II), IBSL, Dip In Eng, Dip In IT

சோழர் காலம்

சோழமன்னர் தனியாட்சி செய்யத் தோடங்கிய கால மாகிய கி. பி. ஒன்பதாம் நூற்றண்டின் பிற்பகுதி முதற் பதிநான்காம் நூற்றண்டுவரையும் உள்ள காலப்பகுதி, தமிழிலக்கிய வரலாற்றிலே சோழர்காலப்பகுதி யெனப்படும். அது ஏறக்குறைய நாநூறு ஆண்டுகளைக்கொண்டது.

சோழர் காலம்
வினாக்களும் - விடைகளும்

வினா மாதிரி : 01

01.சோழப்பெருமன்னர் கால இலக்கிய வளர்ச்சிற்கு ஏதுவாக அமைந்த சமுக, அரசியல் காரணிகளை விளக்குக?

அல்லது

சோழர் கால அரசியல், சமுக, பொருளாதார நிலையை விளக்குக?

சோழமன்னர் தனியாட்சி செய்யத் தோடங்கிய கால மாகிய கி. பி. ஒன்பதாம் நூற்றண்டின் பிற்பகுதி முதற் பதிநான்காம் நூற்றண்டுவரையும் உள்ள காலப்பகுதி, தமிழிலக்கிய வரலாற்றிலே சோழர்காலப்பகுதி யெனப்படும். அது ஏறக்குறைய நாநூறு ஆண்டுகளைக்கொண்டது.

1. அரசியல் நிலை

தமிழ்நாட்டு அரசியல் வளர்ச்சியை நோக்குமிடத்து, அது சோழப் பெருமன்னர் ஆட்சிக்காலத்தில் மிக உன்னத நிலையி லிருந்ததென்றே கூறலாம். பல்லவராட்சிக்காலம் முடிவடைந்த ஒன்பதாம் நூற்றண்டின் இறுதி தொடக்கம் பதின்மூன்றும் நூற்றண்டின் இறுதிவரையும் (ஏறக்குறைய முந்நூறு ஆண்டு களுக்குச்) சோழராட்சி நிலவிற்று. பல்லவர் வடக்கிலிருந்த கீழைச் சாளுக்கியரோடும் தெற்கிலிருந்த பாண்டியரோடும் நெடுங்காலமாகப் போர் புரிந்துவந்ததனுல் அவராட்சி ஒன்ப தாம் நூற்றண்டில் வலிகுன்றியிருந்தது. அதனையறிந்து, பல காலமாக அவருக்குத் திறைகொடுத்துச் சிற்றரசராயிருந்து ஆண்டுவந்த சோழ அரசர் தனியாட்சி செய்ய முற்பட்டனர். விசயாலயன் என்னும் சோழ அரசன் முதன்முதலாகப் பல் லவரிடமிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றி, அதனைத் தனது தலைநகராகக்கொண்டு தனியாட்சி செய்ய ஆரம்பித்தான். அவனுக்குப் பின் அவன் மகன் முதலாம் ஆதித்தன் பல்லவ ராட்சிக்குட்பட்டிருந்த நாடுகளையெல்லாம் கைப்பற்றி ஆண்டான். இவ்வாறு சோழவமிசத்தினரின் ஆட்சி வளர்ந்துவந்தது. ஆதித்தன் மகன் பராந்தகச் சோழன் பாண்டியரோடு போர் செய்து பாண்டிநாட்டையும் தனது ஆட்சிக்குட்படுத்தினுன் அவனுக்குப் பின் ஆண்ட அரசர்களுள்

இராசராசச் சோழனுடைய காலத்திற் சோழராட்சி உயர்நிலை எய்திற்று. கடற்படை தரைப்படைகளைப் பெருக்கி அவற்றின் உதவிகொண்டு

தமிழ்நாட்டின் வடக்கிலும் மேற்கிலுமுள்ள பலநாட்டரசர்க ளோடு போர்புரிந்து அவர்களை வென்று அங்காடுகளையும் தன் ஆட்சிக்குட்படுத்தினன். பின் ஈழமண்டலத்தையும் கிழக்கிந்திய தீவுகள் பலவற்றையும் தனதாக்கினன். அவன் மகன் இரா சேந்திரச் சோழனுடைய ஆதிக்கம் கங்கைநாடு தொடக்கம் யாவா சுமாத்திராத் தீவுகள்வரையும் சென்றிருந்தது. அவன் ழூகங்கைகொண்டசோழன்" என்றும் அழைக்கப்பட்டான். தமிழர சர்களின் ஆட்சிமுறை உச்சநிலையடைந்தது அவன் காலத்தி லெனலாம். அவன் காலத்திற்குப் பின் சோழநாட்டைச் சிறப் பாக ஆண்ட சோழ அரசர்களுட் பாராட்டத் தகுந்தோர் முதலாங் குலோத்துங்க சோழனும் இரண்டாங் குலோத்துங்க சோழனுமாவர். இரண்டாங் குலோத்துங்கனுடைய காலத்திற்குப்பின் சோழராட்சி வலிகுன்றிப், பதின்மூன்றம் நூற் றண்டின் பிற்பகுதியில் மூன்றம் இராசராசச் சோழனதாட்சிக் காலத்தோடு முடிவடைந்தது. சோழராட்சி நிலைதளர, அவருக் குத் திறைகொடுத்து ஆண்டுவந்த பாண்டியர் தலையெடுத்தனர். அவர்களுள் ஆற்றல் மிக்க சுந்தரபாண்டியன் ஆட்சி செய்த காலத்திலிருந்து பாண்டியர் தனியாட்சி செய்யலா யினர். அக்காலம் முதல் அவராட்சி சிறப்பாக நடைபெற்றது. அவராட்சியும் பதினன்காம் நூற்றண்டிலே தளர்ச்சியுறத் தொடங்கிற்று.

2. சமய நிலை

தமிழிலக்கியங்களுட் பெரும்பாலன சமயச் சார்புடையன வென்பது அவ்விலக்கிய வரலாற்றை நோக்குமிடத்துப் புல ணுகும். மக்கள் தம் வாழ்க்கையிற் சமயவொழுக்கத்தைச் சிறப்பாகப் பாராட்டிவந்தமை, அங்ஙணம் சமயச் சார்புடைய இலக்கியங்கள் பெருவரவினவாகத் தமிழில் எழுந்தமைக்கு ஒரு காரணமாகலாம். ஆகவே, பல்வேறு சமயங்களையும் தமிழ் மக்கள் போற்றி வந்தவாற்றை அறிந்துகொள்ளுதல் தமிழிலக்கிய வரலாற்றைப் படித்தற்குப் பெரிதும் பயன்படு மென்பது சொல்லாமலே அமையும். வைதிக சமயங்கள் பல்லவராட்சிக் காலத்திற் புத்துயிர் பெற்றுத் தழைத்தமை யும் அதனுல் தமிழிலக்கியம் சிறப்படைந்தமையும் முந்திய அதிகாரத்திற் கூறப்பட்டுள்ளன. இனி, சோழராட்சிக் காலத் தில் தமிழ்நாட்டுச் சமயங்கள் ஒன்றேடொன்று பகைமை பாராட்டாது தத்தம் வழிகளில் வளர்ச்சிபெற்று வந்ததையும் அதனுல் தமிழிலக்கியம் சிறப்படைந்து வளர்ந்ததையும் நோக்குவாம்.

பல்லவர் காலத்தில் தம்முள் முரண்பட்டு நின்ற சமயங் கள் சோழர் காலத்திற் பகைமையின்றி வளர்ந்துவந்தன வென்றே அறியக்கிடக்கின்றது. நாட்டு கலத்தையே பெரி தாக மதித்து ஆட்சிபுரிந்த சோழப் பெருமன்னர் எல்லாச் சமயங்களையும் ஒப்ப மதித்து ஆதரித்துவந்தமையால், அக் காலப்பகுதியிற் சமயப்பகை மூளாதிருந்தது. அரசரும் அரச குடும்பத்தினரும் எல்லாச் சமயங்களுக்கும் வேண்டிய உதவி கள் பலவற்றையும் செய்துவந்தனரெனினும், அவர்கள் சைவராயிருந்தமையின் சைவத்தையே சிறப்பாக வளர்த்து வந்தனர். பழைய சைவக்கோவில்களைப் புதுப்பித்தும், நாயன் மாரின் பாராட்டைப் பெற்ற பல இடங்களிற் கருங்கற் கோவில்களைப் புதியனவாய்க் கட்டியும், அவற்றில் நித்திய பூசை முதலியன நடைபெறுதற்கு வேண்டிய பொருள்களை உதவியும் பலவாறு சைவத்தைப் போற்றிவந்தமையால், அக்காலத்திற் சைவம் சிறப்பாக வளர்ந்துவந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பல்லவர் காலத்தில் ஏற்றிவைத்த பத்தி விளக்கைச் சோழர் காலத்தில் வாழ்ந்த அடியார்களும் பிறரும் சுடர்விட்டெரியச் செய்தனர் எனக் கூறுதல் மிகை யாகாது. சைவ வைணவ ஆலயங்களில் நடைபெறவேண்டிய கருமங்கள் குறைவின்றி நடைபெறுதற்பொருட்டு மக்கள் பலர் மானியமாக நிலங்கள் பலவற்றை விட்டதுமன்றி, வேறு பல பொருள்களைக் கொடுத்தும் அவற்றை ஆதரித்துவந்தனர். ஆலயங்களிலே தேவாரங்களையும் திவ்விய பிரபந்தங்களையும் ஒதுதற்கு வேண்டிய வசதிகளை மக்கள் செய்துவந்ததிலிருந்து பல்லவர் காலத்தில் எழுந்த பத்திப்பாடல்களுக்குச் சோழர் காலத்திலிருந்த பெருமதிப்பு ஒருவாறு புலனாகும். வைதிக சமயங்களை வளர்க்கும் நோக்கமாகத் தேவாரங்களை நம்பியாண்டார் நம்பியும் திவ்விய பிரபந்தங்களை நாதமுனிகளும் அக்காலத்திலே தேடிப் பெற்றுத் தொகுத்திராவிடின், அவற் றுட் பல எமக்குக் கிடைத்திரா. அதனால், அவர்கள் வைதிக சமயங்களுக்கு மட்டுமன்றித் தமிழ்மொழிக்கும் சிறந்த தொண் டாற்றின ரென்றே கூறலாம். மெய்கண்டதேவரும் இராமானுசரும் சுத்தாத்துவிதம் விசிட்டாத்துவிதம் ஆகிய தத்துவக் கொள்கைகளைத் தமிழ்நாட்டிற் பரப்பியதும் சோழர் காலத்தி லேயே என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பல்லவர் காலத்தில் வைதிக சமயங்களால் அலைப்புண்டு நலிவெய்தியிருந்த சமணம் பௌத்தமாகிய இரு சமயங்களும் சோழர் காலத்திலே தத்தம் வழிகளில் வளர்தற்கேற்ற வசதி கள் பலவற்றையும் பெற்றுத் தழைக்கலுற்றன. அச்சமயத் தோர் சிறந்த இலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் இயற்றித் தமிழை வளர்த்துவந்தனர்.

வினா மாதிரி : 02

02. சோழர் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்துக.

1.பெருங்காப்பியம்
2.சிறுகாப்பியம்
3.பேரிலக்கியம்.
4.சிற்றிலக்கியம்
5.உரை நூல்கள்
6.இலக்கண நூல்கள்
7.சைவசித்தாந்தநூல்கள்
8.நிகண்டுகள்
9.தொகுப்பிலக்கியங்கள்
10.நாடகங்கள்

01.பெருங்காப்பியம்

- சீவக சிந்தமணி
- வளையபதி
- குண்டல கேசி

02.சிறுங்காப்பியம்

- நீல கேசி
- யசோதர காவியம்
- நாக குமார காவியம்
- உதயண குமார காவியம்
- சூழாமணி

03.பேரிலக்கியம்

- கம்ப இராமயணம் -கம்பர்
- பெரிய புராணம் -சேக்கிழார்
- கந்த புராணம்

04.சிற்றிலக்கியம்

- நள வெண்பா –புகழேந்திப் புலவர்
- கலிங்கத்து பரணி-சயன் கொண்டாயர்
- தற்கயாக பரணி –ஒட்டக் கூத்தர்
- மூவர் உலா -ஒட்டக் கூத்தர்
- குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் -ஒட்டக் கூத்தர்

05.உரை நூல்கள்

தமிழ்.எஸ்.எஸ்.லைன்

- ❖ தொல் காப்பியத்துக்கு இளம்பூரணர் எழுதிய உரை
- ❖ தொல் காப்பிய சொல் அதிகாரத்துக்கு சேனாவராயர் எழுதி உரை
- ❖ சிவஞான போதத்திற்கு மெய்கண்ட தேவர் பொழிப்புரை எழுதியுள்ளார்
- ❖ தொல்காப்பிய பொருள் அதிகாரத்துக்கு பேராசிரியர் எழுதி உரை
- ❖ யாப்பெருங்கலம் வீர சோழியம் போன்ற இலக்கணநூல்களுக்கு உரை எழுதப்பட்டிருக்கிறது

06.இலக்கண நூல்

- ❖ நன்னூல்
- ❖ நேமி நாதம்
- ❖ வீர சோழியம்
- ❖ நம்பி அகப் பொருள்
- ❖ தண்டி அலங்காரம்
- ❖ வச்சணந்தி மாலை
- ❖ யாப்பெருங்கலம்
- ❖ யாப்பெருங்கலக் காரிகை

07.நிகண்டுகள்

- ❖ ஆசிரியர் நிகண்டு
- ❖ உரிச்சொல் நிகண்டு
- ❖ திவாகர நிகண்டு
- ❖ கஜாதர நிகண்டு

08.சைவசித்தாந்த நூல்கள்

- ❖ திருவுந்தியார்
- ❖ திருக்களிற்று பாடியார்
- ❖ திருவருள் பயன்
- ❖ சிவஞான போதம்
- ❖ சிவஞான சித்தியார்
- ❖ சிவப் பிரகாசம்
- ❖ உண்மை விளக்கம்
- ❖ உண்மை நெறி விளக்கம்
- ❖
- ❖ கொடிக் கவி
- ❖ நெஞ்சு விடு தூது
- ❖ வினா வெண்பா
- ❖ போற்றிப் ப.ஃ.றொடை
- ❖ இருவா இரு ப.ஃ.து

09.தொகுப்பிலக்கியங்கள்

- ❖ பன்னிரண்டு திருமுறைகள் -நம்பியாண்டநம்பி
- ❖ நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் -ஸ்ரீமத் நாதமுனிவர்

10.நாடகங்கள்.

- ❖ ராஜ ராஜேஸ்வர நாடகம்
- ❖ பும்புலியர் நாடகம்

தமிழ்.லைன்.

வினா மாதிரி : 03

03.அ.சோழப் பெருமன்னர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களை குறிப்பிடுக.
ஆ.சிற்றிலக்கியங்களை சுருக்கமாக விளக்கு.
இ.சிற்றிலக்கியங்களின் பொதுவான பண்புகளை தருக.

அல்லது

சிற்றிலக்கியங்களை விளக்கு அதன்பண்புகளை தருக.

அல்லது

சோழர்காலத்தில் சிற்றிலக்கியம் பெறும் முக்கியத்தினை ஆராய்க.

அ.)
பல சிற்றிலக்கியங்களை இயற்றிய பெரும்புலவர்களும் அக் காலப்பகுதியில் வாழ்ந்தனர். அவர்களுட் **சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புக ழேந்திப்புலவர், நம்பியாண்டார்நம்பி, பட்டினத்துப்பிள்ளையார், கருவூர்த்தேவர்** முதலியோர் சிறந்தவ ராகக் குறிப்பிடத்தக்கவர்கள். அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களுட் கவிச்சக்கரவர்த்திகள் என்று பாராட்டப்பெற்றவர்கள் **கம்பன், சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர்** ஆகிய மூவர். அவர்களுள் முதலாம் குலோத்துங்கசோழன் (கி. பி. 1078-- 1118) காலத்தில் நிகழ்ந்த கலிங்கப்போரைக் கலிங்கத்துப் பரணி என்னும் பிரபந்தத்திற் சயங்கொண்டார் பாடியுள்ள" னர். இதுவே பரணிப் பிரபந்தங்கள் யாவற்றுள்ளும் சிறந்த தாகலின் இதன் ஆசிரியர் "பரணிக்கோர் சயங்கொண்டான் என்று பாராட்டப்பட்டுள்ளனர். பரணிப்பிரபந்த வகையுள் முதன்முதலாகத் தோன்றியது இக்கலிங்கத்துப் பரணியாகும்.

சிற்றிலக்கியங்கள்
கலிங்கத்துப் பரணி – சயன் கொண்டையார்
தற்கயாக பரணி - ஒட்டகூத்தர்
நள வெண்பா - புகழேந்தி
மூவர் - ஒட்டகூத்தர்
குலோத்துங்க சோழன்பிள்ளைத் தமிழ் - ஒட்டக்கூத்தர்

ஆ).

கலிங்கத்து பரணி

- ✓ பரணி என்பது ஆயிரம் யானைகளை கொண்ற வீரன் மீது பாடப்படும் பிரபந்தமே பரணி பிரபந்தம் ஆகும்.இங்கு குலோத்துங்க சோழனின் படைதளபதி கருணாகர தொண்டமான் கலிங்க நாட்டின் மீது போர் தொடுத்த செய்தியை கூறுவதாக இவ்விலக்கியம் விளங்குகிறது தமிழில் எழுந்த முதலாவது பரணியாகவும் விளங்கிறது
- ✓ கலிங்கத்து பரணியின் ஆசிரியர் சயன் கொண்டையார் இங்கு குலோத்துங்க சோழனின் படைத்தளபதி கருணாகரத் தொண்டமான் கலிங்க நாட்டின் மீது போர் தொடுத்த செய்தியை கூறுவதாக அமைந்திருக்கிறது.
- ✓ கலிங்கத்து பரணியிலே தாழ்இசைதுறையில் விருத்தம் போன்ற யாப்பு கையாளப்பட்டு இலக்கியம் படைக்கப்பெற்றுள்ளது கலிங்கத்து பரணியில் குலோத்துங்க சோழனின் வீரம் படைபலம் போர் உத்தி போன்ற சிறப்புக்களை சயன் கொண்டையார் பொருள்ளணி சொல்லணி போன்றவையும் மற்றும் இலக்கியச்சுவைக் கூடாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

தற்கயாக பரணி

- ✓ இதுவும் வீரன் மீது பாடப்பட்ட ஒரு பரணி பிரபந்தம் ஆகும் இங்கு தற்கனுடைய யாகத்தை வீரபத்திரர் அழித்த வரலாற்றுக்களை கூறுவதாக தற்கயாக பரணி விளங்குகிறது .இதுவடமொழியில் இருந்து கதை எடுக்கப்பெற்று தற்கயாக பரணி அமையப் பெற்றிருக்கிறது
- ✓ இங்கு வீரம் போர்த்திறமை போன்ற பண்புகள் உள்வாங்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும் தற்கயாக பரணி இயற்றியவராக ஒட்டக்கூத்தர் விளங்குகிறார்

நளவெண்பா

- ✓ நளனின் வரலாற்றை அதாவது நயனின் வீரம் போர் நாட்டுசிறப்பு அழகு நளன் தமேந்திகாதல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களை இலக்கியசுவை அணிப்பிரயோகங்களுக்கு கூடாக ஆசிரியர் புகழேந்தி புலவர் ஆவார்.
- ✓ புகழேந்திப் புலவர் வெண்பா யாப்பினை பயன்படுத்தி மேற்கூறிய பல விடயங்களை வெளிப்படுத்தி இருக்கிறார் .
  உதராணம் -வீரம் - கூர்மையான வேலைத்தாங்கியவன் திண்டோள் வயவேந்தார் காளையை போன்றவன் .

- ✓ காதல் - நளனைஇனங்கண்டு கொள்ளல் .கண்ணிமைத்தல் லால்லடிகள் காசிநியில் நளணின் சிறப்பு- பொன்னாலன தேரினைஉடையவன் காளையை போன்றவன் .மல்லல் மறுகி மடநாகு

மூவர் உலா

- ✓ சோழர் காலத்திலே மன்னர்களின் உலச்சிறப்புக்களை சிறப்பித்து பாடுகிற இலக்கியங்கள் எழுந்துள்ளது மூவர் உலாவும் மன்னர் வீதி உலாச்சிறப்பை விளக்குகிறது.இங்கு விக்கிரம ராஜ சோழன் இரண்டாம் இராஜ இராஜ சோழன் இரண்டாம் குலோத்துங்கு சோழன் ஆகிய மூன்று மன்னர்களின் வீதி உலாசிறப்புக்களை அதன் மூலமாக அவர்களின் பெருமைகளை சிறப்புக்களை வெளிப்படுத்தி காட்டுவதாக இவ்விலக்கியம் அமையப் பெற்றிருக்கிறது. இவ்விலக்கியத்தின் ஆசிரியர் ஒட்டகூத்தர் ஆவார்.

குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்

இவ்விலக்கியமானது குலோத்துங்க சோழனின் சிறுபராயத்தை சிறப்பித்து கூறுகின்றது ஒரு இலக்கியாமக இது விளங்குகிறது .குலோத்துங்க சோழமன்னனின் சிறுபராயம் அவனது சிறப்புக்கள் அவனுடைய வாழ்கை வரலாறு போன்ற பலவிடயங்கள் சிறப்பித்து கூறப்படுகிறது இவ் இலக்கியத்தில் ஆசிரியர் ஒட்டக் கூத்தர் ஆவார்.

வினா மாதிரி : 04

04. இ.சிற்றிலக்கியப் பண்புகள் அல்லது
சோழர் கால சிற்றிலக்கியத்தின் தனித்துவமான பண்புக்களை விளக்குக?

01.அகம் சார்ந்த பண்புகள் இங்கு பேசப்படுகிறது.
உதாரணம் - நள வெண்பா
.....
.....
.....
.....
.....

02.புறம் சார்ந்த பண்புகள் இங்கு பேசப்படுகிறது
உதாரணம் - தற்கயாக பரணி கலிங்கத்து பரணி
விளக்க வேண்டியது (வீரம் கொடை நாட்டுசிறப்பு படைப்பலம்)
.....
.....
.....
.....
.....

03.யாப்பு பயன்படுத்தப்பட்டிருக்கிறது

உதாரணம் - வெண்பா-நளவெண்பா
தாளிசைதுறைவிருத்தம்-கலிங்கத்து பரணி

.....
.....
.....
.....
.....

04.வட மொழிச் செல்வாக்கு காணப்படுகிறது

உதாரணம் - தற்கயாக பரணி கலிங்கத்து பரணி

.....
.....
.....
.....
.....

05.காவியப் பண்புகள் இங்கு காணப்படுகிறது

உதாரணம் - நள வெண்பா

.....
.....
.....
.....
.....

06.பல சொல்அணி பொருள்அணி பிரயோகம்

உதாரணம் - நள வெண்பா

.....
.....
.....
.....
.....

07.உலா பாடும் மரபு காணப்படுகிறது

உதாரணம் - மூவர் உலா

.....
.....
.....
.....
.....

08.தூது விடு மரபு காணப்படுகிறது

உதாரணம் - நள வெண்பா

.....
.....
.....
.....
.....

தரம்.தமிழ்.லைன்

வினா மதிப்பீடு : 05

05. (அ) ஒரு காவியத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய அம்சங்கள் யாவை?
(ஆ) சோழப் பெருமன்னர் காலம் 'காவிய காலம்' எனக் கூறப்படுவதற்கு ஏதுவாய்யமைந்த இலக்கியங்கள் பற்றிக் கருத்துரை வழங்குக.
(இ) இக்காலத்தெழுந்த சிற்றிலக்கியங்கள் யாவை?

(அ). தமிழில் காப்பிய இலக்கண நூலும் பெருமளவு காப்பியங்களும் தோன்றிய காலமாகச் சோழர்காலம் காணப்படுகின்றது. இக்காலத்தில் தோன்றிய முதல் அணிஇலக்கண நூல் **'தண்டியலங்காரம்'** ஆகும். இந்நூல் வடமொழியில் இருந்த அணியிலக்கண நூலான **'காப்பிய தர்சனம்'** என்ற நூலைப் பின்பற்றித் தமிழில் எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் காப்பிய இலக்கணம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது.

- வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்பன நூலின் முகப்பில் கூறப்படல் வேண்டும். இவற்றில் ஏதாவது ஒன்று வந்தால் போதுமானது. இவை மூன்றும் வரவேண்டும் என்பதில்லை. மூன்றும் வந்தாலும் குற்றம் அன்று.

- **நூலின் பயன்** அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் பயப்பதாய் இருத்தல் வேண்டும்.
- **வர்ணனை**மலை, கடல், நாடு, நகர், பருவம் சூரியோதயம், சந்திரோதயம் முதலியன பற்றிய இயற்கை வர்ணனைகள் இடம்பெறல் வேண்டும்.

- **கதைப்பின்னணி** தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டு இருப்பதோடு அவன் திருமணம், பூந்சோலையில் மகளிருடன் இன்புறுதல், அவர்களுடன் நீர் நிலைகளில் நீராடல், அவர்களுடன் புணர்தல், கலத்தல், மக்களைப் பெறுதல் முதலியவை இடம்பெறல் வேண்டும்.
மேலும், அவன் முடி சூடி அரசனாதல், மந்திராலோசனை புரிதல், பகை அரசனிடம் தூது அனுப்புதல், படையெடுத்துச் செல்லுதல், போர் புரிதல், வெற்றி பெறல் முதலியவற்றையும் உடையதாய் இருத்தல் வேண்டும்.

- **நூலின் அமைப்பு** சந்தி, சதுக்கம், இலம்பகம், பரிச்சேதம் ஆகியவற்றுள் ஏதாவது ஒரு முறையில் நூல் பகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- **நூலில் நவரசங்களும் இடம்பெற வேண்டும்.**
(நவரசம் - காதல், வீரம், சிரிப்பு, கோபம், வியப்பு, இழிப்பு, சோகம், பயம், சாந்தம்)

(ஆ) ☐ இக்காலத்தில் எழுந்த காவியங்கள் - சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.
.....
.....
.....
.....
.....

☐ புராண இலக்கியங்கள் அல்லது மாபெரும் காவியங்கள் - கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம்.
.....
.....
.....
.....
.....

☐ காவிய இலக்கணத்தின் தோற்றமும் பெருங்காவிய – சிறுகாவியப் பாகுபாடும் - உதயணகுமார காவியம், யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி, நாககுமார காவியம்

eranai.com

.....
.....
.....
.....
.....

□ சமய அடிப்படையில் இக்காவியங்களைப் பாகுபாடு செய்யலாம்.

.....
.....
.....
.....
.....

.....
.....
.....
.....
.....

.....
.....
.....
.....
.....

(இ) **சிற்றிலக்கியம்**

- நள வெண்பா –புகழேந்திப் புலவர்
- கலிங்கத்து பரணி-சயன் கொண்டார்
- தற்கயாக பரணி –ஒட்டக் கூத்தர்
- மூவர் உலா -ஒட்டக் கூத்தர்
- குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் -ஒட்டக் கூத்தர்

வினா மாதிரி : 06

06. சோழர் காலஇலக்கியம் பண்புகள் அல்லது சோழர் பெருமன்னகால காவியம் இலக்கிய பண்புகளை விளக்குக?

1.உலகியல் சாந்த விடயங்கள் இலக்கயங்களில் வெளிகாட்டப்படுகிறது
உதாரணம்-இராமயணம் மகாபரதம் நளவெண்பா சீவகசிந்தாமணி

2.உலகியலும் இறையியலும் இவ்விலக்கியங்களில் காணப்படுகின்றது
உதாரணம்- இராமயணம்-இரமன் கடவுள்
சீவகசிந்தாமணி தஞ்சை பெருங்கோயில் கட்டிய இராஜஇராஜசோழன்

3.காவிய இலக்கிய பண்புகள் இலக்கியங்களில் காணப்படுகிறது .
உதாரணம்- பெருங்காப்பியம் சிறுகாப்பியம் பேர்இலக்கியம் சிற்றிலக்கியம்

4.அரசர்கள் வள்ளல்கள் புலவர்கள் போன்றவற்றை புகழ்ந்து வாழ்த்தி பாடியமை
உதாரணம்- மூவர் உலா நளவெண்பா-அரசன்
திருத்தொண்டர் பெரிய புராணம்-புலவர் அடியார்கள்

இராமாயணம் (சடையப்பர்) -வள்ளல்

5.அறம் பொருள் இன்பம் வீடு போன்றவற்றை அடிப்படையாக கொண்டு இலக்கியங்கள் எழுந்துள்ளது
உதாரணம்- சீவசிந்தாமணி இராமாயணம் நீலகேசரி

6.யாப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது
உதாரணம்- தாழிசை துறை கலிங்கத்துபரணி வெண்பா –நளவெண்பா

7.உரைநடை தன்மைகள் காணப்படுகிறது
உதாரணம்- தொல்காப்பித்திற்கு இளப்பூரணர் எழுதிய உரை
தொல்காப்பிய பொருள் அதிகாரத்துக்கு சேனவராயர் எழுதிய உரை
தொல்காப்பிய பொருள் அதிகாரத்திற்கு பேராசிரியர் எழுதிய உரை

8.பெண்களை விட ஆண்களுக்கு முதன்மையாகா கொண்டு காணப்படுகிறது
உதாரணம்-சீவகசிந்தாமணி நளவெண்பா

9.நாட்டு நகர வர்ணணை காணப்படகிறது
உதாரணம் - கலிங்கத்து பரணி – கலிங்க தேசம்
இரமாயாணம் - கோசலை அலாத்தி நகரம்
நளவெண்பா - விதர்ப் நாடு

10.வடமொழிச் செல்வாக்கு

11.சொல்லணி பொருள் அணிகள் பளன்படுத்தப்படுகிறது

12.தொகுப்பிலக்கியப் பண்புகள் காணப்படுகிறது

இலக்கியப் பண்பு

தமிழிலக்கியம் பல்லவர் காலத்திலும் பார்க்கச் சோழர் காலத்திற் சிறப்பாக வளர்ந்துவந்துளது. பிறநாட்டிலிருந்து வந்து தமிழ்நாட்டை அடிப்படுத்தி ஆண்ட பல்லவர் தமிழ் நாட்டிலே தம் ஆட்சியை நிலைப்படுத்த முயன்றனரன்றி, நாட்டின் நன்மைகருதி உழைத்தன ரெனக் கூறுதல் பொருந்தாது. பகையரசர்களோடு போராடுவதிலேயே அவருக்க மெல்லாம் சென்றதனால் அவராட்சி தமிழ்நாட்டிற்குப் பெரும் பயன் அளித்திலது. அதனால், சமுதாயமும் வளர்ச்சியடைந்திலது. அத்தகைய நிலையிற் சமுதாயத்தின் சிறப்பைக் கூறும் இலக்கியங்களும் அரசனைப் பாராட்டும் செய்யுட்களும் தோன்றுதல் அரிதாகும். சோழப் பெருமன்னரின் ஆட்சிமுறை பல்லவர் ஆட்சிமுறையிற் பெரிதும் வேறுபட்டதொன்றாகும். காட்டு நலன்கருதி அவர் ஆண்டதன் பயனுக, பகை பிணி வறுமை யென்பன நாட்டைவிட்டகல, அது செல்வம் மலிந்து வளஞ்சிறந்தது. கல்வியறிவையும் கலைகள் பலவற்றையும் வளர்த்தலில் மக்களுக்கு ஊக்கம் பிறந்தது. அக்காலத்திலே தழிழர்தம் பண்பாடு உச்சநிலை எய்திற்றென்றும், சமுதாயம் உயிர்த்துடிப்புடையதாய் விளங்கிற்றென்றுங் கூறலாம். உள்ளத் தெளிவும் உணர்ச்சிப் பெருக்கும் பொருந்தப்பெற்ற பல புலவர் களை அச்சமுதாயம் தோற்றுவித்தது. அவர் அச்சமுதாயத்தினையும் அதன் சிறப்புக்குக் காரணமாயிருந்த மாட்சிமிக்க மன்னரின் ஆட்சித்திறனையும் பாராட்டிப் பல நூல்களை இயற்றினர். சங்ககாலப் புலவர்கள் தம் காலத்தி லிருந்த அரசரின் வீரச்செயல் கொடைச்சிறப்பு முதலிய வற்றையும், மக்களின் மாண்புடைப் பண்புகளையும் தம் செய்யுட்களிற் சித்திரித்துக் காட்டியதுபோல, சோழர் காலத்தி லிருந்த புலவர்கள் சோழரின் சீரிய குணங்களையும் அவ ராட்சியால் உயர்நிலையடைந்த சமுதாயத்தின் சிறப்பினையும் தம் நூல்களிற் பாராட்டியிருப்பதை நோக்கின், அவ்விரு காலப் பிரிவுகளிலு மெழுந்த இலக்கியப்போக்கிலுள்ள ஒப்புமையை ஒருவாறு உணரலாம்.

சோழப்பெருமன்னர் காலப்பகுதியில் எழுந்த இலக்கியங் களுட் பெரும்பாலானவை உலகியலைச் சிறப்பித்துக் கூறுவன. அத்தகைய இலக்கியங்கள் தோன்றுதற்கு இக்காலத் திற் சமுதாய வாழ்க்கை சிறந்து விளங்கினமையே காரண மாகும். ஒரு புலவனுடைய கற்பனையைத் தூண்டுவனவற்றுள் அவனுடைய சூழ்நிலை முக்கியமான தொன்றகும். உலக வாழ்க்கை இழித்திடப்படுதற்கு உரியதொன்றன்று என்ற எண்ணம் மக்களுடைய மனத்தில் நிலைபெறுதற்கான சூழ் நிலை இக்காலப்பகுதியில் நிலவலாயிற்று. அதனுல், உலகியற் சிறப்புக்களைப் பாராட்டும்

நோக்கத்துடன் இக்காலப் புலவர் கள் இலக்கியங்களை இயற்றினர். பல்லவர் ஆட்சிக்காலத்தில் உலகியல் சிறப்புருமையால் அதனைப் புனைந்துகூறும் இலக்கியங்கள் பல அக்காலத்திலே தோன்றவில்லை என்றே கூற லாம். அக்காலப்பகுதியில் வாழ்ந்த சமண பௌத்த சந்நியாசி கள் செய்துவந்த சமயப்பிரசாரமும் உலக வாழ்க்கையால் மனிதன் அடையும் பெறுபேறுகளுக்கும் சுகத்திற்கும் முரண்பா டாகக் காணப்பட்டது. இத்தகைய பல காரணங்களாற் பல்ல வர் ஆட்சிக்காலத்தில் உலகியல் பாராட்டப்படவில்லை, உல கியிலில் ஈடுபட்டவர்போலக் காணப்பட்ட சுந்தரமூர்த்திசுவாமி களும் வாழ்வாவது மாயம் இது மண்ணுவது திண்ணம்" என்று கூறியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. சோழப் பெருமன்னர் காலத்தில் நாடு கன்னிலை பெற்றிருந்தமையாற் சமுதாயவாழ்க்கை சிறப்புற்று விளங்கிற்று. ஆகவே, உலகியலைச் சிறப்பித்துக் கூறும் இலக்கியங்களும் தோன்ற லாயின. உலகியல் விருத்தி சமய வளர்ச்சிக்குத் தடையான தொன்றன்று என்பதைச் சோழப்பெருமன்னர் காலத்துத் தமிழ்நாட்டு வரலாறு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மக்கள் உலக காரியங்களில் ஈடுபட்டபோதும் இறைவழிபாட் டைக் கைவிடவில்லை. நாட்டின் நலன்கருதி ஆட்சிபுரிந்த மன்னர்கள் சமயவளர்ச்சிக்கு வேண்டிய பணிகள் பலவற் றைச் செய்துவந்தனர். மன்னர் காட்டிய வழியில் மக்கள் சென்றமையால் உலகியலும் இறைவழிபாடும் ஒன்றற்கொன்று முரண்படாத வகையில் தமிழ்நாட்டிலே தழைக்கலாயின. அக் காலத்தில் எழுந்த பேரிலக்கியங்களில் அவையிரண்டும் ஒருங்கு சிறப்பிக்கப்படுதலை நாம் காணலாம்.

சோழப் பெருமன்னர் காலத்தைக் காவிய உற்பத்திக் காலமெனக் கூறலாம். ஒரு தலைவனுடைய வாழ்க்கை வர லாற்றை எடுத்துக் கூறுமுகத்தால் மக்களுடைய கல்வாழ் விற்கு இன்றியமையாத அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளையும் கூறும் இலக்கியம் காவியம் அல் லது காப்பியம் எனப்படும். அது பெருங்காப்பியம் சிறு காப்பியம் என இருவகைப்படும். அவையிரண்டும் தன்னிக ரில்லாத் தலைவனுடைய வாழ்க்கை முழுவதையும் புனைந்து கூறுவன் எனினும், அவையிரண்டனுள் அறம் முதலிய நான்கினையும் கூறுவதைப் பெருங்காப்பியம் என்றும், அந் நான்கனுள் ஒன்றேனும் பலவேனும் குறைவுபடுதலுடையதைச் சிறுகாப்பியம் என்றும் கூறுவர். சிந்தாமணி, கம்பராமாயணம் முதலியன பெருங்காப்பியங்கள் சூளாமணி, நீலகேசி முதலியன சிறுகாப்பியங்கள். வடமொழி இலக்கியமரபைத் தழுவித் தமிழில் எழுந்த இலக்கியவகைகளுட் சிறந்ததொன்றாகக் கருதப்படும் இக்காப்பியம் சோழப்பெருமன்னர் காலப் பகுதியிலே தமிழில் ஆரம்பித்துளதாகும். இக்காலத்திலெழுந்த தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்கள் இக்காப்பிய இலக்கணத்தைத் தெளிவாகக் கூறுகின்றன.

தன்னிகரில்லாத் தலைவனுடைய வாழ்க்கைச் சிறப்பைப் புனைந்துகூறும் இக் காப்பியங்கள் பல்லவர் காலப்பகுதியிற் றோன்றாமைக்கும் சோழப்பெருமன்னர் காலப்பகுதியிலே தோன்றினமைக்கும் அவ்வக் காலங்களிலே தமிழ்நாடு இருந்த நிலைதான் ஓரளவிற்குக் காரணம் எனலாம். பல்லவர் காலத்து அரசர்களுடைய வாழ்க்கை மக்களுடைய வாழ்க்கைக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கவில்லை. ஆனால், சோழப்பெருமன்னர் காலத்திலோ வெனின் மன்னர் வாழ்ந்தவகை மக்களுடைய மனத்தைப் பிணித்ததுமட்டுமன்றிப், பெரும் புலவர்களுடைய கற்பனையை யும் தூண்டவல்லதாகக் காணப்பட்டது. இங்ஙனம் மன்ன ருடைய வாழ்க்கை சிறப்புற்று விளங்கின்மைதான் தமிழிற் காவிய உற்பத்திக்கு ஒரு முக்கிய காரணமாகும். சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய பெருங்காப்பியங்களிலே வடநாட்டு மன்னர்களுடைய வாழ்க்கைச் சிறப்பு, ஆட்சித்திறன் முதலி யன புனைந்துகூறப்படுவனவாகக் காணப்படினும், உண்மை யிலே சோழப் பெருமன்னருடைய வாழ்க்கைச் சிறப்பு முத லியனவும் அந்நாட்டு மக்களுடைய சீரிய குணங்களும் வளம், பொருந்திய "அந்நாட்டின் இயற்கையழகும் பிறவும் கூறப்பட் டிருப்பதை நாம் காணலாம். **உதாரணமாக, களனி நாட்டின் "இயற்கை வளத்தைக் கூறப்போந்த கம்பன், அதற்குச் சோழ நாட்டை உவமையாக அமைத்துக் காவிரி நாடன்ன களனி நாடு" என்று கூறியிருப்பதை நோக்கும்பொழுது அவனுக்குச் சோழநாட்டின் இயற்கையழகில் எத்துணை ஈடுபாடு இருந்தது என்பது புலகினை ன்றது. சுருங்கக்கூறின், சோழப்பெருமன் னர் காலத்தில் எழுந்த இலக்கிய நூல்கள் சோழநாட்டின் இயற்கைவளம், மக்கள் வாழ்க்கைச்சிறப்பு, சோழப் பெரு மன்னர்களின் ஆட்சித்திறன் முதலியவற்றைப் புனைந்துகூறும் நோக்கமாக எழுந்தனவெனக் கூறலாம்.**

சோழர் காலத்தில் அரசரும் மக்களும் வைதிக சமயங் களை வளர்த்தற்குப் பல முயற்சிகளைச் செய்துவந்தனர். கருங்கற் கோவில்கள் பலவற்றைக் கட்டி ஆலயத் திருப் பணிகள் பல செய்ததுமன்றி, வேதாகமக் கல்வியை நாட்டில் விருத்திசெய்தற்பொருட்டு நிலங்களை மானியமாகப்

பிராமண ருக்கு அளித்தும், வடமொழிக் கல்விநிலையங்களை நிறுவியும் அவர் வைதிக சமயங்களை ஆதரித்தனர். இவ்வாறு வடமொழிக் கல்வி பல்லவர் காலத்திலும் பார்க்கச் சிறப்பாக அக்காலத் திற் போற்றப்பட்டதன் பயனுக, வடமொழி நூல்களிலுள்ள கதைகளையும் கருத்துக்களையும் ஆதாரமாகக்கொண்டு சோழர் காலப் புலவர்கள் பல காவியங்களையும் புராணங்களையும் பிரபந்தங்களையும் இயற்றினர். முதன்முதலாகத் தமிழ்ப்புலவர் வடமொழிக்காவிய முறையினைத் தழுவித் தமிழிற் காவியங்க ளியற்றியது அக்காலத்திலேயேயாகும். வடசொற்களும் வட மொழி இலக்கண அமைதிகளும் தமிழில் அதிகமாகப் புகுந்த அக்காலத்தில், அவற்றை அமைக்கும் முறையைக் கூறும் இலக்கண நூல்களும் தமிழிலெழுந்தன. மேற்கூறிய நூல்களை விட, தத்துவசாஸ்திர நூல்கள் அக்காலத்திலே தோன்றிய தற்கும் வடமொழிக் கல்வி விருத்தியே காரணமெனலாம். பல்லவர் காலத்திற் பத்திப்பாடல்களைப் பெற்று வளர்ந்த வைதிக சமயங்கள் தாட்டிய உண்மை நெறிகளைத் தத்துவ சாஸ்திரத்தின் உதவிகொண்டு நிறுவவேண்டியிருந்தமையால், மெய்கண்டதேவர் இராமானுசர் முதலிய பெரியார்கள் அக்காலத்திலே தத்துவ நூல்களை இயற்றினர். அக்காலக் தொடக் கம் தமிழ் நாட்டிலே தத்துவ நூலாராய்ச்சி விருத்தியடையச் சாஸ்திர சம்பந்தமான பல நூல்கள் தமிழில் எழலாயின.

சோழர்காலத்திலிருந்த பெரியோர்கள் இவ்வாறு புதிய துறைகளிலே தம் ஊக்கத்தைச் செலுத்தித் தமிழிலக்கியத்தை வளர்த்ததோடமையாது தம் முன்னோர் இயற்றிய நூல்களைப் பொன்னேபோற் போற்றிப் படித்தனுபவித்தும்வந்தனர். அவர்கள் தொல்காப்பியம் முதலிய பழைய இலக்கண நூல்களை யும், எட்டுத்தொகை முதலிய இலக்கியங்களையும், ஐயந்திரி பறக் கற்றுவந்தனரென்பதை அக்காலத்தில் எழுந்த உரைநூல் களால் அறியலாம். பல்லவர் காலத்தில் எழுந்த பத்திப் பாடல்களை நாதமுனிகளும் நம்பியாண்டார்நம்பியும் தேடிப் பெற்று உலகுக்கு உதவினர். பல்லவர் காலத்திலும் அதற்கு முன்னும் வாழ்ந்த நாயன்மார்களின் அறிதற்பொருட்டு, நம்பியாண்டார்நம்பி சேக்கிழார் முதலிய சைவப் பெரியார்கள் சிறந்த ஆராய்ச்சிகளை நிகழ்ததென்பதை அவர்கள் இயற்றிய நூல்களாலறியலாம்.

அகவல், வெண்பா, வஞ்சி, கலி என்னும் நால்வகைப் பாவிற்கும் இனமாயுள்ள தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்கள் பல்லவர்காலத்திற் பெருவழக்காயிருந்தன. அவை அக்காலத்திற் பண்ணுடு பாடுதற்குரியன ”வாக விளங்கின. அவற்றின் ஒசைச்சிறப்பில் ஈடுபட்ட சோழர் காலப் புலவர்கள் அவற்றைக் கையாண்டு காவியங்களையும் பிரபந்தங்களையும் இயற்றினர். நீண்ட கதைகளைப் பாடுதற்கு இளங்கோவடிகள் முதலிய முற்காலப் புலவர்கள் கையாண்ட அகவற்பாவிற் காவியங்களே இயற்றும் வழக்கம் பல்லவர் காலத்திற்குப்பின் அருகிவிட்டதென்றே கூறல் வேண்டும். சோழர்காலத்திற் பலவகையான யாப்புக்களைப் புலவர்கள் கையாண்டனரென்பதை அக்காலச் சாசனங்களாலும் இலக்கண நூல்களாலும் உரைகளாலும் அறியலாம்.

சோழப் பெருமன்னர் காலத்திலே தமிழிலக்கியம் ஒரு புது வழியிற் சென்றது என்பதற்கு அக்காலப் புலவர்கள் பாவின வகைகளைக் கையாண்டு பேரிலக்கியங்களை இயற்றினமையை ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இசையொடு பாடுதற் குரிய இப்பாவினங்கள் பல்லவர் காலத்துப் பத்திப் பாடல்களிற் சிறப்பாகக் கையாளப்பட்டதைப்பற்றி நாம் முந்திய அதிகாரத்திற் கண்டோம். இயற்றமிழிலக்கியங்களை யாத்தற்கும் இவை பயன்படும் என்பதைக்கண்டு, இவற்றைக் காவியங்களிற் கையாளத்தொடங்கிய சோழப் பெருமன்னர் காலத்துப் புலவர்களுள் முதலில் வைத்து எண்ணத் தகுந்தவர் திருத்தக்கதேவர் என்னும் சமணமுனிவராவர். அவர் இயற்றிய சீவகசிந்தாமணி என்னும் காவியத்தை நாம் படிப்போமாயின், அவர் பல்லவர் காலத்துப் பத்திப்பாடல் களிற் காணப்படும் பாவினவகைகளுட் சிலவற்றைத் தெரிந்து, அவற்றைத் தம் காவியத்தில் எவ்வாறு கையாண்டார் என் பதை அறிந்துகொள்ளலாம். அவர் இவ்வாறு செய்ததனுலே தமிழிலக்கிய மரபிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, இயற் றமிழிலக்கியத்தை ஒரு புதுவழியிற் போகச்செய்தனர் எனலாம். இது ஒன்றே திருத்தக்கதேவர் ஒரு பெரும்புலவர் என்பதைக் காட்டுதற்குப் போதுமானது, இயற்றமிழிலக்கியங்கள் கால் வகைப் பாவினுள் யாதேனும் ஒன்றைக்கொண்டு இயற்றப்படுதலே பண்டை மரபாக இருந்துவந்தது. அதனுலேதான் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய நூல்கள் அகவற்பாவிலும் பாரத வெண்பா வெண்பாயாப்பிலும் இயற்றப் பட்டன. வெண்பாவிலிருந்து தோன்றிய கட்டளைக்கலித்துறை என்னும் யாப்புவகை பாண்டிக்கோவை, திருக்கோவையார் ஆகிய நூல்களிற் பல்லவர் காலத்திற் பயன்படுத்தப்பட்டது. சோழப் பெருமன்னர் கால ஆரம்பம் முதலாகக் காவியங்

களும் பிறவும் பாவினங்களில் இயற்றப்பட்டன. இங்வனம் இசைத்தமிழுக்குரிய செய்யுள் வகைகளை இயற்றமிழுக்குப் பயன்படுத்தியமை இக்காலப்பகுதிக்கு உரிய தனிச்சிறப்பாகும்.

வினா மாதிரி : 07

07. (அ) சோழர்கால அரசசபைப் புலவர்கள் யார்?
(ஆ) அவர்களால் இயற்றப்பட்ட நூல்கள் எவை?
(இ) பரணியின் அமைப்பை அல்லது உலாப் பிரபந்தத்தின் அமைப்பை விளக்குக.

(அ)
1. ஜெயங்கொண்டார்
2. ஒட்டக்கூத்தர்
3. நாராயணன்பட்டாதித்தன்
4. பூங்கோயில் நம்பி
5. திரு நாராயணபட்டர்
6. வீராந்த பல்லவராயர்

(ஆ)
1. ஜெயங்கொண்டார் -
கலிங்கத்துப்பரணி - இசையாயிரம் - உலா மடல் (விழுப்பரையர் மேல் எழுதப்பட்டது)

2.ஒட்டக்கூத்தர -
மூவருலா - கலிங்கத்துப்பரணி - தக்கயாகப்பரணி - குலோதுங்க சோழன் பிள்ளைத்தமிழ் - ஈட்டி எழுபது - காங்கேயன் நாலாயிரக்கோவை - அரும்பைத் தொளாயிரம் - சரஸ்வதி அந்தாதி - இராமாயணம் உத்தர காண்டம்.

3. நாராயணன்பட்டாதித்தன் - இராஜராஜ விஜயம்

4. பூங்கோயில் நம்பி – வீரணுக்க விஜயம்

5. திரு நாராயணபட்டர் - குலோதுங்க சரிதை

6. வீராந்த பல்லவராயர்- (இவர் பெயரில் எந்த நூலும் கிடைக்கவில்லை)

(இ)
பரணி
.....
.....
.....
.....
.....

பரணிப் பிரபந்தமாவது, ஒரு பெரும் போர்க்களத்தைப்பெற்ற பேய்கள் பரணி நாளிற் கூழ் அட்டு, உண்டு மகிழ்ந்து அப்போர்க்களத் தலைவனை வாழ்த்தி முடிப்பதாகப் பாடப்படுவதொன்றுகும். கொற்றவையைத் தன் தெய்வமாகப் பெற்ற பரணியென்னும் நாண்மீனுல் இப்பிரபந்தவகை பெயர் பெற்றது என்றும் கூறுவர். பரணிநாளிற் கூளிகள் கூழ் சமைத்துக் கொற்றவையாகிய காளிக்குப் படைப்பது மரபாகும். காவியத்தில் மக்கள் கதாபாத்திரங்களாக அமைதல்போலக் காளியும் அதற்கு ஏவல்செய்யும் கூளிப்பேய்களும் பாத்திரங் களாக இப்பரணியில் அமைகின்றன. அவற்றின் உரையாடல் வாயிலாகக் குலோத்துங்க சோழனுடைய போர்வென்றி முதலியன புனைந்து கூறப்படுகின்றன.

காவியங்களிலே தலைவனுடைய நாட்டுவளம், நகரவளம் முதலியன வருணிக்கப் படுதல்போல இப்பரணியிற் கொற்றவைக்கு உரிய காடு, கோயில் முதலியனவும் அத்தெய்வத்திற்கு ஏவல் செய்யும் பேய்களும் வருணிக்கப்பட்டுள்ளன. இந்நூலாசிரியருடைய வருணனைகளிலே ஒரு தனிச்சிறப்பு உண்டு. அவர் பேய் களை வருணித்துள்ள தாழிசைகளில் நகைச்சுவையும் வியப் புச்சுவையும் கலந்துவருதல் கண்டு இன்புறற்பாலது. பல் வகை அணிகளும் ஒன்பான் சுவையும் பொருந்தப்பெற்ற இச்சிறு பிரபந்தம் பரணிப்பிரபந்தங்களுள்ளே தலைமைபெற்று விளங்குவது மட்டுமன்றித், தமிழிலுள்ள

செய்யுளிலக்கியங்களுள்ளே சிறந்ததொன்றுகவும் விளங்குகின்றது. இதன் பெரு மையை உணர்ந்தே ஒட்டக்கூத்தர் இதனைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி" எனக் கூறிப்பாராட்டினர்.

தாம் கருதிய பொருளைப் புலப்படுத்துதற்கேற்ற ஒசை, சந்தம், உவமை முதலியவற்றை அமைத்துப் பாடுவதிற் சயங்கொண்டார் வல்லு நர் என்பதற்குப் பேய்களின் இயல்பு கூறும் மேல்வரும் தாழிசைகள் **தக்க உதாரணங்களாகும்:**

பெருநெ டும்பசி பெய்கல மாவன
பிற்றை நாளின்முன் னுளின் மெலிவன
கருநெ டும்பனங் காடுமு ழுமையுங்
காலுங் கையுமு டையன போல்வன.
வன்பி லத்தொடு வாதுசெய் வாயின
வாயி னுல்நிறை யாதவ யிற்றின முன்பி ருக்கின்மு கத்தினு மேற்செலமும்மு ழம்படும் அம்முழங்
"காளின. வற்றலாகஉ லர்ந்தமு துகுகள்மரக்க லத்தின்ம றிபுற மொப்பன ஒற்றை வான்தொளைப் புற்றெனப் பாம்புடன் உடும்பு முட்புக் குறங்கிடும் உந்திய, தமிழரசர் செய்த போரைப் பொருளாகவுடைய நூல்கள் பல இருந்தன் அவற்றுள் இந்நூலும் கோச்செங்கனுன் காலத்தில் வாழ்ந்த பொய்கையார் பாடிய களவழியுமே எமக்குக் கிடைத்துள்ளன.

உலா

.....
.....
.....
.....
.....
.....

விக்கிரம சோழன், இரண்டாங் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகியியடை காலத்திலும் வாழ்ந்த ஒட்டக்கூத்தர், அம்மூவர்மேலும் உலாப் பிரபந்தங் கள் பாடியதோடு குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி என்ற பிரபந்தங்களைப் பாடினர். வீர பத்திரக் கடவுள் தக்கனைக்கொன்று அவன் செய்த யாகத்தை அழித்த கதையைக் கூறுவது தக்கயாகப்பரணி. நளவெண்பாவைப் பாடிய புகழேந்திப்புலவரை இரண்டாங் குலோத்துங்கசோழன் காலத்தவர் என்பர். அறவுரை? களையும் ஒழுக்க நெறிகளையும் கூறுதற்கேற்ற ஒசைச் சிறப் பினையுடைய வெண்பாயாப்பிற் சுவைகள் பல கொண்ட கதைகளை விரித்துக் கூறுதல் எல்லார்க்கும் எளிதன்று. அத் தகைய வெண்பாயாப்பில் ஒசைச்சிறப்பும் கற்பனைச்சிறப்பும் பொருந்துமாறு நளன் கதையை இணையற்ற வகையில் அவர் பாடினர். அதனுல், அவர் "வெண்பாவிற் புகழேந்தி" என் றும், கேட்டாலும் இன்பம் கிடைக்குங் கண்டீர் கொண்ட கீர்த்தியொடு பாட்டாலுயர்ந்த புகழேந்தி" என்றும் பாராட்டப் பட்டனர். நளவெண்பா 424 நேரிசை வெண்பாக்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு சிறு நூலாயிருந்தபோதும் அதுகாப்பிய இலக்கணங்கள் பல நன்கமையப்பெற்றுக் கற்போர் உள்ளத்தைக் கவர்ந்துகொள்ளும் இயல்பினதாக விளங்கு கின்றது. வெண்பாயாப்பு வரையறைப்பட்ட இலக்கணத்தை உடையதொன்று. அத்தகைய யாப்பிலும் ஒசை விகற்பங்களை அமைத்து அவற்றின் உதவிகொண்டு உணர்ச்சிபேதங்களை வெளிப்படுத்தல்கூடும் என்பதைத் தம் நூலில் எடுத்துக் காட்டிப் புலவருலகிற் புகழிட்டிய பெருமை அவருக்கு உரியது. உணர்ச்சிமிக்க பாடல்கள் பல அவர் காதல் மனையாளைக் காரிருளிலே தனியேவிட்டுச் சென்ற நளன், தான் போகும் வழியிற் கடலையும் நண்டுகளையும் கண்டு உள்ளம் உருகி உரைத்ததாகப் பாடிய வெண்பாக் கள வருமாறு:

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட பாதகஜனப் பார்க்கப் படாதென்ரு-நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ வோடி ஒளிக்கின்ற தென்னே உரை. போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி நாவாய் குழற நடுங்குறுவாய்-தீவாய் அரவகற்று மென்போல ஆர்கலியே மாதை இவகற்றி வந்தாய்கொல் இன்று.

உலகப்பற்றைத் துறந்த பெரியார்களுட் பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந் துறப்பது அரிதரிது" என்று பாராட் டப்பட்ட பட்டினத்துப்பிள்ளையார் பாடிய பத்தியனுபவங்கள் நிறைந்த பிரபந்தங்கள் பதினுராந்திருமுறையுள்ளே தொகுக் கப்பட்டுள்ளன. திருவிசைப்பாப் பாடிய ஒன்பது நாயன் மார்களுட் பலர் இக்காலத்தவராவர். பத்திச்சுவைமிக்க அவர் பாடல்கள் யாவும் ஒன்பதாந்திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பத்திரகிரியார் காலத்திருந்த பட்டினத்தடிகள்

பட்டினத்துப் பிள்ளையாரின் வேருவர். அக்காலப் பிரிவிலிருந்த சோழப் பெருமன்னரின் வீரச் செயல் முதலியவற்றைக் குறித்துப்பாடிய மெய்க்கீர்த்திகளிற் காணப்படும் செய்யுட்கள் இக்கால இலக்கியவளத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. யாப்பு அணிகலன்களைக் கொண்டுள்ள அச்சிறப்புடைச் செய்யுட்களைக் கல்விகேள்வி களிற் சிறந்த புலவர்களே பாடியிருத்தல் வேண்டும்.

வினா மாதிரி : 08

08. (அ) சோழப் பெருமன்னர்கால இலக்கியப் பண்பை வகுத்துக் காட்டுக.?
(ஆ)சோழப் பெருமன்னர்கால இலக்கியப் பண்புகளுக்கும் விஜயநகர – நாயக்க மன்னர்கால இலக்கியப் பண்புகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகள் யாவை?
(இ) ஒட்டக்கூத்தர் பற்றிச் சிறுகுறிப்பெழுதுக. (விடை கருத்தாங்கில்.....)

(அ)
- ☐ **உலகியல் போற்றும் பண்பு**
- ☐ **உலகியலையும் இறையியலையும் இணைத்துக் காட்டியமை**
- ☐ **வடமொழி மரபுக்கமையப் பல காவியங்கள் தோன்றியமை**
- ☐ **சிற்றிலக்கியங்கள் பல தோன்றியமை**
- ☐**பழமை போற்றும் பண்பு**
- ☐ **சைவ சித்தாந்த நூல்களின் தோற்றம்**
- ☐ **உரைநடை வழர்ச்சியடைந்தமை**
- ☐ **புகழ் பாடுதல்**
- ☐ **யாப்புக்கள்**
- ☐ **அணிகள்**

(ஆ)
- ☐ சோழர்காலத்தில் பெருங்காவியங்கள் பாடப்பட நாயக்கர் காலத்தில் தலபுராணங்கள் பாடப்பட்டமை
- ☐ சோழர்காலத்தில் மன்னர், கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பாடப்பட நாயக்கர் காலத்தில் வசைப் பாடல்கள் பாடப்பட்டமை
- ☐ விஜய நகர நாயக்கர் காலத்தில் பெருங்தொகையான தனிப்பாடல்கள் பாடப்பட்டன. (உ– ம்) வித்துவச்செருக்கு, நிந்தஸ்துதி, சிலேடை, சந்தத்தைப் போற்றும் பாடல்கள்.
- ☐ விஜய நகர நாயக்கர் காலத்தில் பொதுமக்களும் பிரபந்தங்களில் இடம் பெறும் பண்பு தோன்றியமை. (உ–ம்) பள்ளு, குறவஞ்சி.....
- ☐ விஜய நகர நாயக்கர் காலத்தில தத்துவச் சார்பு, பழமை போற்றும் பன்பு மற்றும் வடமொழி யாப்புக்களான யமகம், மடக்கு, திரிபு, சித்திரக்கவி போன்றவற்றில் பாடல்களைப் பாடியமை.

இ.)
ஒட்டக் கூத்தர்

பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழரின் அவைக்களத்தில் பெருஞ் செல்வாக்குடன் விளங்கிய புலவர் ஒட்டக்கூத்தர். அவர் இலக்கண இலக்கியங்களில் வல்லவர். வடமொழிக் கல்வியும் நிரம்பியவர். பழைய மரபுகளை விடாமல் போற்றி, பிறர் செய்யும் தவறுகளைக் கடுமையாக எடுத்துத்துக் கடிபவர்.

விக்கிரம சோழனுக்கு (கி.பி.1113 -1118) அரசவைப் புலவராக விளங்கியவர். அவனுடைய மகனுக்கும் (கி.பி.1133 - 1150) பேரணுக்கும் (கி.பி.1146 - 1163) தமிழ் கற்பித்த ஆசிரியராகவும் அவர்களுடையஅரசவைக் புலவராகவும் பெருமதிப்புடன் வாழ்ந்தவர். இம்மூன்று அரசர்களைப் பற்றியும் தனித்தனியே உலா நூல்கள் பாடியிருக்கிறார். அம்மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து **மூவருலா** என அழைப்பர்.

உலா என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்றாகும். பாட்டுடைத் தலைவன் உலா வருதலையும், அப்போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை,

அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவப் பொது மகளிரும் அவனைக் கண்ணுற்றுக் காமுறுவதையும் பாடப் பெறுவதனால் உலா என்னும் பெயர் அமைந்தது. கலிவெண்பாவால் இந்நூல் இயற்றப்படும்.

உலாப் பாடுவதில் இவர் வல்லவர் என்பதை,'கோவை உலா அந்தாதிக்கோர் ஒட்டக் கூத்தன்' என்னும் வாக்கால் அறியலாம். இவரியற்றிய மூவருலாவில் சோழர்கள் குலமரபும், பாட்டுடைத் தலைவனின் பெருமையும், தலைவன் பள்ளியெழுந்து நீராடித் தன்னை ஒப்பனை செய்து கொண்டு பட்டத்து யானையில் பவனி வருதலும், உடன்வருவோரும், குழாங்களும், குழாங்களின் கூற்றும், ஏழு பருவப் பெண்டிரின் உள்ளக் கிளர்ச்சியம், அதனால் நிகழும் செயல்களும், பல்வேறு விளையாட்டுக்களும் கூறப்படுகின்றன.

விக்கிரம சோழனுடைய வெற்றியைப் பாராட்டி **கலிங்கத்துப்பரணி** என்ற பெயரில் ஒரு நூலைப்பாடினார் ஆனால், இந்நூல் இன்று கிடைக்க வில்லை. காரணம் செயங்கொண்டனார் பாடிய **கலிங்கத்துப்பரணி** என்னும் நூலுக்குக் கிடைத்த பெரும் புகழால் ஒட்டக்கூத்தரின் நூல் மறைந்தது என்பர் அறிஞர். ஆயினும் சிவனைப் பாடிய மற்றொரு பரணி இன்றும் உள்ளது. அது**தக்கயாகப்பரணி** எனப்படும்.

இரண்டாம் குலோத்துங்கனைப் பற்றி உலா படியதோடு ஒரு பிள்ளைத்தமிழையும் பாடியிருக்கின்றார். அது**குலோதுங்க சோழன் பிள்ளைத்தமிழ்**எனப்படும். சோழர்களின் அமைச்சர், சேனைத்தலைவர் ஆகியவர்கள் மேலும் சில நூல்களைப் பாடியிருக்கின்றார். மேலும் இவர் **அரும்பைத் தொளாயிரம், காங்கேயன் நாலாயிரக்கோவை,ஈட்டி எழுபது, இராமாயணம் - உத்தர காண்டாம்**முதலிய நூல்களயும் இயற்றியிருக்கின்றார்.

இவருடைய நூல்களில் செய்யுள்கள், வர்ணனைகள் மிகுந்தனவாய்ச் செறிவு உடையனாய் இருந்தபோதிலும் அவற்றின் நடையில் இயல்பான ஓட்டம் அமையவில்லை. அவருடைய வாழ்வில் இருந்த பெருமிதமும் கடுமையும் அவர் இயற்றிய செய்யுகளில் அமைந்தன. உள்ளத்து உணர்வின் செம்மையும் இயல்பும் படியவில்லை. தமிழ்ப் புலவர் வேறு எவர்க்கும் இல்லாத பெருஞ்சிறப்புக்களை வாழுங்காலத்தில் பெற முடிந்ததே அல்லாமல், அவர் படைத்த நூல்கள் அத்தகைய பெருங்சிறப்புக்களோடு விளங்க முடியவில்லை.

‘

எஸ்.எஸ்.ஜீவன்

வினா மாதிரி : 09

09.சோழன் பெருமன்னன் கால இலக்கியங்களில் பல்லவர் கால இலக்கியச் செல்வாக்கு காணப்படும் விதத்தினை விளக்குக.?

அல்லது

பல்லவர்கால இலக்கியங்கள் சோழர்பெருமன்னர் காலஇலக்கிய வளர்ச்சிக்கு எவ்வாறு வழிகாட்டியது ஆராய்க.?

அல்லது

பல்லவர்கால இலக்கிய சொல்வாக்கு சோழர்கால இலக்கியங்களில் காணப்படும் விதம் ?

அல்லது

பல்லவர் சோழர்கால இலக்கிய ஒற்றுமை போக்குகள்

	பல்லவர்காலம்	சோழர்காலம்
1.	நாயன்மார்களின் திருமுறைகள் …… …… …… …… ……	பன்னிரண்டுதிருமுறைதொகுப்புநம்பியாண்ட நம்பி …… …… …… …… ……
2.	ஆழ்வரின் பாடல் …… …… …… …… ……	நாலாயிரத திவ்விய பிரபந்தம் …… …… …… …… ……
3.	.யாப்பு உருவாக்கம் தாளிசைதுறை விருத்தப்பா …… …… …… …… ……	யாப்பு உருவாக்கம் தாளிசைதுறை விருத்தப்பா …… …… …… …… ……
4.	உலாச்சிறப்பு பிரபந்தம் -இறைவனின் உலா …… …… …… …… ……	உலா பிரபந்தம் -மன்னர்களின் உலா …… …… …… …… ……
5.	குலசேகர ஆழ்வரின் தசரதன் புலம்பல் …… …… …… …… ……	கம்பராமயணம் …… …… …… …… ……
6	தேவரத்தின் காணப்படும் தத்துவம்	சைவசித்தாந்த இலக்கிய உருவக்கம்

tamil.lk

	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
7.	புறப்பொருள் மரபு - நந்தி கலம்பகம்	புறப்பொருள்மரபு-இரமாயணம் கலிங்கத்து பரணி
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
8.	உரைநடைஇ லக்கியம்	உரைநடை இலக்கியம்
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
9.	சுந்தரனின் திருத் தொண்டர் புராணம்	சோக்கிழாராஎ் பெரியபுராணம்
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
10.	பெரியாழ்வார் கண்ணனின் சிறுபராயத்தை சிறப்டித்து பாடியிருக்கிறார்	பிள்ளை தமிழ்
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
11.	பக்திசார இலக்கியம் பெரும் கதை	காவிய இலக்கியம்
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
12.	பக்தியோடு சேந்த இயற்கை வர்ணனை வாவிதோலு வெண்கமலம் ஆகங்	காவியங்களின் சீவக சிந்தமணி
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
13,	வடமொழிசெல்வாக்கு	வடமொழி செல்வாக்கு
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....
	.....	.....

தமிழ்.லங்காசிறி.com

14.	நாட்டுநகர வர்ணைகள் பின்பற்றப்படுகிறது சம்பந்தரின் தேவராம் வலம் வந்து மடவார் நடமாட …….. …….. …… …… ……..	நாட்டுபாடல் நகரபாடல் செல்வாக்கு …….. …….. …… …… ……..
15.	பல்வேறுபட்ட பாத்திர உணர்வுகளும் தன்மைகளும் …….. …….. …… ……..	…….. …….. …… …… ……..

வினா மாதிரி : 10

10.சோழர் காலத்தில் காவியம் அதிகம் எழுந்தமைக்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக.

அல்லது

சோழர்கால காவியம் தோற்றுவாயும் அதற்கான காரணங்களையும் விளக்குக.

1.அரசியல் நிலமை
உதாரணம்- இராஜ இராஜ சோழன் ராஜேந்திர சோழன்

2.சிறந்த சமூகப் பின்னனி
உதாரணம்- அறிவு படைத்த புலவர்

3.உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை
உதாரணம்- கம்பராமயணம் - கம்பரும் சடையப்பவள்ளல்

4.காவியம் எழுதுதற்கு முன்உதாரணம் காணப்படுகிறது
உதாரணம்- தசரதன் புலம்பல் - கம்பராமயணம்
தண்டிகை அலங்காரம்
உலாமரபுகள்

5.வடமொழிச் செல்வாக்கின் மூலம் உருவானது

உதாரணம்- வான்முகி இராமயணம் - கம்பராமயணம்
தற்கயாக பரணி

6.நாட்டினுடைய இயற்கை அழகுகள் காவியப்படைப்புக்கு முன்உதாரணமக அமைந்து விடுகிறது

7.இறையியலும் உலகியலும் ஒன்றுக்கொன்று முறன்படாமல் வளர்ச்சி அடைந்தமை
உதாரணம்- இராமயணம் இராஜ இராஜ சோழன்

8.யாப்புக்கள் காரணமாக காணப்படுகிறது
உதாரணம்- வெண்பா விருத்தப்பா

வினா மதிப்பீடு : II

11. திருமுறைகளும் நாலாயிர திவ்விய பிரபந்தங்களும் பெறும் முக்கியத்துவத்தினை விளக்ககுக?

பல்லவராட்சிக் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார் களும் அவதரித்துச் சிறந்த பத்திப் பாடல்களைப் பாடியருளி, வைதிக சமயங்களுக்குப் புத்துயிரளித்த வரலாற்றை முந்திய அதிகாரத்திற் கூறினோம். நாயன்மார் செய்துவந்த தொண்டின் சிறப்பை முதலாம் ஆதித்தன் காலம் முதலாகச் சோழப் பெருமன்னரும் மக்களும் உணர்ந்து, அவர்களின் உருவச் சிலைகளைக் கோவில்களில் வைத்து வணங்கிவந்தன ரென்பது அக்காலச் சாசனங்களால் அறியக்கிடக்கின்றது, இவ் வாறு போற்றப்பட்ட நாயன்மார்கள் அருளிச்செய்த தோத் திரப்பாடல்களுட் சில ஆங்காங்கு மக்களால் ஓதப்பட்டு வந்தனவன்றி, அவற்றையெல்லாம் ஒருங்குபெற்று ஓதக் கூடியவகையில் அவை அக்காலத்திலே தொகுக்கப்படவில்லை. அந்நிலையில் நம்பியாண்டார் நம்பி அவதரித்து நாயன்மார் பாடிய தேவாரத் திருப்பதிகங்களைத் தேடிப் பெற்று, ஏழு திருமுறைகளாக வகுத்துச் சைவ உலகுக்கு அளித்தனர். அவருக்கு அகப்படாத திருஞானசம்பந்தசுவாமிகளின் திருப்பதிகமொன்றைப் பழைய சாசன மொன்றிலிருந்து இக் கால் ஆராய்ச்சியாளர் பெற்றிருக்கின்றனராகலின், அக்கா லத்திலே நம்பியாண்டார் நம்பிக்கு அகப்படாமற் பல திருப் பதிகங்கள் நாட்டில் இருந்திருக்கவேண்டு மென்றே கொள்ளக் கிடக்கின்றது.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டுள் ளன. அவற்றுள் சம்பந்தசுவாமிகள் பாடிய திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர்சுவாமிகள் பாடிய திருப்பதிகங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறை களாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரங்கள் ஏழாந் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. "மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகமும் திருச்சிற்றம்பலக்கோவை யாரும் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாக்களும் திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமங் திரம் பத்தாக் திருமுறையாகவும், காரைக்காலம்மையார் சேரமான் பெருமாள் நாயனூர் முதலியோர் பாடிய பிரபந்தங் கள் பதினுராந் திருமுறையாகவும், பெரியபுராணம் பன்னிரண்டார் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. அவற் றுள் முதலேழு திருமுறைகளுமே நம்பியாண்டார்கம்பியால் தொகுக்கப்பட்டன என்பர். இவ்வாறு அவர் தேவாரத்திருப் பதிகங்களைத் தேடித் தொகுத்திராவிடின், அவற்றுட் பல அழிந்திருக்குமென் பதில் ஐயமில்லை. அதுவுமன்றி, பல்லவர் காலப் பகுதியிலும் அதற்கு முன்னும் வாழ்ந்த சிவனடியார் களின் வரலாற்றை அறிதற்கும் அவர் பலவாறு முயன்றன ரென்பதை அவர் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியைக் கொண்டு அறியலாம். இவ்வாறு அவர் சைவத்துக்கும் தமி ழுக்கும் செய்த தொண்டு பெரிதும் பாராட்டற்குரியது. முதலே அவர் வகுத்ததுபோல, ஏனைய திருமுறைகளைப் பிற்காலத்தோர் வகுத்து அவற்றுடன் கூட்டிப் பன்னிரு திருமுறைகளாக அமைத்தனரென்பர்.

வீரநாராயணபுரத்தில் அவதரித்த நாதமுனிகள் அங்குள்ள திருமால் கோவிலுக்குத் தொண்டு செய்துவரும் நாளில், நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூரிலிருந்து அக் கோயிலைத் தரிசிக்கச்சென்ற அடியார் சிலர் திருப்பதிக மொன்றைப்பாட நாதமுனிகள் அது திருவாய்மொழியென் ணும் நூலிலுள்ளது என்பதை அறிந்து அந்நூலைப்பெற ஆசை கொண்டனர். உடனே அவர் திருக்குருகூருக்குச் சென்று திருவாய்மொழியை மட்டுமன்றி, நம்மாழ்வார் பாடிய ஏனைய பிரபந்தங்களையும் பிற ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களை யும் தேடிப்பெற்று, அவற்றையெல்லாம் நாலாயிர திவ்விய பிரபந்தமாகத் தொகுத்தனர். அது வுமன்றி, அங்ங் னம் தொகுத்த பாக்களுக்கெல்லாம் இசையமைத்தும் உதவினர். இவ்வாறு அவர் வைணவத்துக்கும் தமிழுக்கும் செய்ததொண்டு பாராட்டற்குரியது. அவர் கி. பி. ஒன்பதாம் நூற்றண்டின் இறுதிக்காலத்திலும் கி. பி. பத்தாம் நூற்றண்டின் முற்பகுதி யிலும் இருந்தனரென்பர்.

வினா மதிரி : 12

12.இலக்கண நூல்கள் பந்றி கருத்துரைக்க?

சோழராட்சிக் காலத்தில் வடமொழிக் கல்வி தமிழ்நாட் டில் ஓங்கியதன் பயனுக, வடநூற் கருத்துக்கள், யாப்பு அணிவகைகள் முதலியன தமிழின்கட் புகுந்தன. தற்பவ, தற்சம உருவங்களோடு பல வடசொற்களும் தமிழிலக்கியங் களில் வந்துள்ளன. தமிழ்மொழி மரபிலும் காலத்திற்கு ஏற்ற வாறு சிற்சில மாற்றங்கள் ஏற்படலாயின. பேச்சு வழக்கோடு அம்மாற்றங்கள் நின்றுவிடாமல் எழுத்துவிழக்கிலும் இடம் பெறத் தொடங்கிவிட்டனவாகலின், அவற்றையெல்லாம் தழு விக்கொள்ளுதற் பொருட்டுப் புதிய இலக்கண நூல்களை இக் காலத்துப் புலவர்கள் இயற்றவேண்டியது அவசியமாயிற்று. அதனுல், இலக்கண நூல்கள் பல இக்காலப்பகுதியில் எழுந் தன. அவற்றுள், அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, புத்தமித்திரர் இயற்றிய வீர சோழியம், குணவீரபண்டிதர் இயற்றிய நேமிநாதம், பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல், நாற்கவிராசகம்பி இயற்றிய நம்பியகப்பொருள், தண்டியாசிரியர் இயற்றிய தண்டியலங்காரம் முதலியன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் தமிழ் நாட்டில் வடமொழிக்கு இருந்த பெருமதிப்பின் விளைவாகத், தமிழ் மொழியில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணிஎன்ற ஐவகை இலக்கணங்களிலும் உண்டான மாற்றங்களை இந்நூல்கள் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. இவ்விலக்கண நூல்களுட் பெரும்பாலனவற்றைச் சமண பௌத்தமதப் பெரியார்கள் இயற்றினர். தமிழிலே தோன்றிய நிகண்டுகளுட் பலவற்றையும் அவர்களே இயற்றினர்.

வினா மதிரி : 13

13. சைவ சித்தாந்த நூல்களின் முக்கியத்துவத்தினை ஆராய்க?

உலகத்திலுள்ள சமயங்கள் பலவும் தோன்றி வளர்ந்து வந்த வரலாற்றை நோக்குமிடத்து ஓர் உண்மை எமக்குப் புலனுகின்றது. அதாவது, சமய வாழ்க்கையில் ஒரு மனித னுக்குத் தெய்வ நம்பிக்கை முதலிற் பிறக்கின்றது அதைத் தொடர்ந்து சமயம் போதிக்கும் உண்மைகளை ஆராய்ந்து அறிதற்குவேண்டிய விசாரணை யில் அவனுக்கு ஊக்கம் உண்டாகிறது. அதேபோல, ஒரு சமுதாயத்திற் சமயவாழ்க்கை ஆரம்பிக்கும்பொழுது அது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு தொடங்குகின்றது. அதன் பின் புத்திசாதுரியத்தி ணுற் சமய உண்மைகளை அறிதற்குவேண்டிய ஆராய்ச்சி அச் சமுதாயத்தின்கண் பிறக்கின்றது. எனவே, தெய்வபத்தியோடு கூடிய தோத்திரப்பாடல்கள் முதலில் உருவெடுக்கின்றன அவற்றைத் தொடர்ந்து விசாரணையின் பயனுகச் சாத்திரங் கள் தோன்றுகின்றன. சைவசமய வரலாறும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. காரைக்காலம்மையார் காலத்திற் பத்திமார்க்கமாய் விளங்கிய சைவம், பல்லவர் காலத்திற் கருமயோக ஞான மார்க்கங்களையும் உடைய தொன்ருக விளங்கிற்றென்று தேவாரம், திருவாசகம், திரு மந்திரம் என்பவற்றல் அறியலாம். அக்காலங்களில் எழுந்த சைவ நூல்களுள்ளே திருமந்திரம் ஒழிந்த ஏனைய நூல்கள் யாவும் தோத்திரவுருவமானவை யென்பதை முந்திய அதி காரங்களிற் கூறினுேம். அந்நூல்களுள் ஆங்காங்கு கூறப் பட்டுள்ள சைவசமயக் கருத்துக்கள் யாவும் சோழர்காலத்தில் எழுந்த சைவசித்தாந்த நூல்களில் ஆராயப்படுகின்றன.

பதி பசு பாசங்களாகிய முப்பொருள்களின் உண்மை களையும் அவற்றின் இலக்கணங்களையும் வீடுபேற்றிற்கு உரிய நெறியினையும் அந்நெறி நின்றர் பெறும் பயனையும் சைவ ” சித்தாந்த சாஸ்திரம் பதினுன்கும் எடுத்துக்கூறுகின்றன.

அவையாவன திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இரு ப.ஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினுவெண்பா, போற்றிப்ப.ஃருடை, கொடிக் கவி, நெஞ்சுவிடுதுது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன. அவற்றுள், திருவுந்தியார் என்னும் நூல் பன்னிரண்டாம் நூற்ருண்டிலே திருவியலூர் உய்யவந்ததேவ நாயனுரால் இயற்றப்பட்டது. அவருடைய மானுக்கருக்கு மாணுக்கராய் விளங்கிய திருக்கடவூர் உய்ய வந்ததேவநாயனுர் திருவுந்தியாரிலுள்ள பொருளை விளக்கும் நோக்கத்தோடு திருக்களிற்றுப்படியார் என்னும் நூலை இயற்றினர். அவற்றின் பின் பதின்மூன்றம் நூற்ருண்டில் மெய் கண்டதேவரால் இயற்றப்பட்ட சிவஞானபோதமே சைவசித் தாந்த முதனூல் எனப்படும்.

அது பன்னிரு சூத்திரங்களைக் கொண்ட ஒரு சிறு நூலாயுள்ளபோதும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் யாவற்றையும் தன்னுள்ளே கொண்டு விளங்கு கின்றது. மெய்கண்டதேவருக்கு மானுக்கராய் விளங்கிய அருணந்திசிவாசாரியர் சிவஞானபோதத்தின் உட்பொருளை விளக்கிக்காட்டுங் கருத்துடன் சிவருன சித்தியார் என்ற வழி நூலையும் இருபாவிருப.்.து என்ற நூலையும் இயற்றினர். சிவஞானசித்தியார் என்னும் நூல் பரபக்கம், சுபக்கம் என் னும் இரு பிரிவுகளையுடையது. அவற்றுட், பரபக்கம் புறச் சமயங்களைக் கண்டிப்பது சுபக்கம் சிவஞானபோதம் கூறும் சித்தாந்தத்தை விரித்துக்கூறுவது. மெய்கண்டதேவர் மானுக்க ருள் இன்னுெருவரான மன வாசகங்கடந்தார் எழுதிய நூல் உண்மைவிளக்கம் எனப்படும். மேற்கூறிய ஆசிரியர்களுக்குப் பின் பதினுன்காம் நூற்றண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த உமாபதி சிவாசாரியர் இயற்றிய சிவப்பிரகாசம் என்னும் நூல் சிவஞானபோதத்தின் வழிவந்த புடைநூலாகக் கருதப் படும். அவர் அதனையன்றித் திருவருட்பயன், விணுவெண்பா, போற்றிப்ப.்.ருடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் நூல்களையும் அருளிச்செய்தனர்.

வினா மதிரி : 14

14. உரைநூல்கள் பெற்ற வளர்ச்சியினை விளக்குக?

பல சிறந்த காவியங்களையும் பிரபந்தங்களையும் தத்துவநூல்களையும் இலக்கண நூல்களையும் தமிழ்மொழி பெற்று விளங்கியகாலம் சோழப்பெருமன்னர் காலம் என்பது மேற் கூறியவற்றிலிருந்து விளங்கும். தொல்காப்பியர் காலத்தி லிருந்த தமிழ்மொழி சோழர்காலத்திற் சிற்சில வேறுபாடுகளை யுடையதாய் விளங்கியமையால், அவற்றைத் தழுவிப் புது இலக்கண நூல்கள் இயற்றல் சோழர்காலத்தில் அவசிய மாயிற்று. அவற்றுள் யாப்பருங்கலம், வீரசோழியம் என்பன வற்றிற்கு இக்காலத்திலேயே சிறந்த உரைகளும் வகுக்கப் பட்டன. தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூலையும் இக்காலத்திற் பல ஆசிரியர்கள் ஆராய்ந்து உரைகள் எழுதினர். முதன்முதல் அதற்கு உரை எழுதிய இளம்பூரணர் இக்காலத்தவராவர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரைவகுத்த சேவைரையரும், பொருளதிகாரத்திற்கு உரைவகுத்த பேரா சிரியரும் இக்காலத்தவரென்பர். பேராசிரியர் பொருளதிகாரத் திற்கு மட்டுமன்றித் திருக்கோவையாருக்கும் ஒர் அரிய உரை எழுதியுள்ளனர். மெய்கண்டதேவர் தாம் எழுதிய சிவஞான ‘போதத்திற்கு ஒரு பொழிப்புரையும் எழுதியுள்ளனர். பல்லவர் காலத்து உரைநடை மோனேயெதுகைகளை அதிகமாகக் கொண்டு பாட்டின் சாயலுடையதாயிருந்ததென்று முந்திய அதிகாரத்திற் கூறினும். சோழர்காலத்து உரைநடையின் சிறப்பை இளம்பூரணர், சேணுவரையர், பேராசிரியர் முதலியோர் எழுதிய உரைகளிலிருந்து அறியலாம். சிறந்த உரை உண்மைநெறிவிளக்கம் என்ற நூலைச் சீகாளித் தத்துவநாதர் இயற்றினரென்பர் சிலர்.

திருக்கோவையாருக்கு உரையெழுதிய பேராசிரியர் தொல் காப்பியத்திற்கு உரையெழுதிய பேராசிரியரின் வேருவர் என்பர் சிலர் நடைக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருட்டெளிவு, தர்க்கரீதியாகக் கருத்து அமையுந்தன்மை, மலைவின்மை முதலிய பல சிறந்த பண்புகளோடு பொருளுக்கேற்ற ஒத்திசை பொருந்தியதாக அக்காலத்து உரைநடை விளங் கிற் று. செய்யுள் நடையில் மட்டுமன்றி உரைநடையிலும் அக்காலப் பகுதி சிறந்து விளங்கிற்றெனலாம்.

வினா மதிப்பீடு : 15

சோழர் கால காவியங்கள்

சோழன் முதலிய புவிச்சக்கரவர்த்திகள் ஆட்சிபுரிந்த சோழர்காலமே புகழ்படைத்த கம்பன் முதலிய கவிச்சக்கரவர்த்திகள் வாழ்ந்து ஒப்பற்ற தமிழ்க் காவியங் களை இயற்றித் தமிழ் மொழியின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டிய காலமாகும். தமிழிலுள்ள காவியங்களுள் ஐந்தினைப் பெருங்காப்பியம் என்றும் ஐந்தினைச் சிறுகாப்பியம் என்றும் கூறுவர். இவற்றுட் **சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி** என்பன பெருங்காப்பியங்கள். சூளாமணி, யசோதரகாவியம், உதயண குமாரகாவியம், நீலகேசி, நலகுமாரகாவியம் என்பன சிறுகாப்பியங்கள். இவற்றுட் பெரும்பாலன சம ணர்களாலும் ஏனைய பௌத்தர்களாலும் இயற்றிப்பட்டவை. இவற்றுள் மணிமேகலையும் சிலப்பதிகாரமுமே தமிழ்நாட்டுக் கதைகளைக் கூறும் காவியங்கள், பிறகாட்டுக் கதைகளைக் கூறும் ஏனைய காவியங்கள் எட்டும் சோழர் காலத்தில் எழுந்தவை என்பர்.

அவை வடநூல் மரபினைத் தழுவித் தமிழில் அணியிலக்கணம் வகுத்த தண்டியாசிரியர் முதலியோர் குறித்த காப்பிய இலக்கணங்களுக்கு அமய இயற்றப்பட்டவை. கடவுள் வாழ்த்து முதலியவற்றை முதலிலுடையதாய், ஒப்பற்ற குணங்களையுடைய ஒருவனைத் தலைவனைக்கொண்டு, அவனுடைய நாடு, நகர், பிறப்பு, வளர்ப்பு, அவனுடைய செயற் கரிய செயல்கள் முதலியவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் பயப்பக் கூறுவது பெருங் காப்பியம் என்றும், அறம் முதலிய நான்கனுள் ஒன்றேனும் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளைச் சைவரென்பர் ஒரு சாரார். குறைபாடுடையது சிறுகாப்பியம் என்றும் கூறுவர். தண்டி யாசிரியர் காலத்திற்குமுன் எழுந்த சிலப்பதிகாரம் மணிமேகலை யென்னும் நூல்கள் அவர் கூறிய பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவும் அமையப் பெருமையால், அவை பெருங்காப்பியங்களல்லவெனச் சிலர் கூறுவது பொருந்தாது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளும் பயப் பத் தமிழ்நாட்டுக் கதையொன்றினைத் தழு வித், தமிழ்மரபு பிறழாது பல சிறப்புக்களும் ஒருங்கே பொருந்த இயற்றப் பட்டுள்ள சிலப்பதிகாரம், தண்டியாசிரியர் கூறும் பெருங் காப்பிய இலக்கணங்கள் யாவும் அமையப்பெற்ற காவியங் களிலும் சிறந்து விளங்குவதனுல் அதனையும் பெருங்காப்பி யத்தோடு ஒப்பக் கொள்ளுதல் எவ்வகையானும் பொருந்தும். மணிமேகலையும் அத்தகையதே. மேற்கூறிய காப்பியங்களை விட வேறுபல சிறந்த காப்பியங்கள் சோழர் காலத்தில் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் தமிழ் மொழிக்குப் புகழினை ஈட்டிக்கொடுத்த பெரியபுராணமும் கம்பராமாயணமும் கந்த புராணமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

வடமொழி மரபினைத் தழுவித் தமிழிலெழுந்த காப்பியங்களுட் பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவும் சிறப்பாக அமையப் பெற்ற நூல்சிங் தாமணி. அது பெருங்காப்பியங்களுள் முதலில்வைத்து எண்ணப்படுவது. சீவகன் கதையைக் கூறும் இந்நூல் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவராற் பத்தாம் நூற்றண்டில் இயற்றப்பட்டது. இன்பத்தை மிகுத்துக் கூறும் இந்நூலின்கணுள்ள பதின் மூன்று இலம்பகங்களிலும் மணங்களே கூறப்படலால் இது மண நூல் என்றும் பெயர் பெறும் காப்பிய அமைப்பில் வடமொழி மரபைத் தழுவி இயற்றப்பட்டதெனினும், கருத்தமைதியிலும் உவமை உருவகச் சிறப்பிலும் பிறவற்றிலும் இது தமிழ்மரபு பிறழாது கற்பனைத் திறனுடையதாய் விளங்குகின்றது. புதுமுறையில் எழுந்த இக்காப்பியம் சோழர் காலத்துப் புலவர்களுக்கும் அரசர்களுக்கும் ஒரு விருந்தாய் விளங்கிற்று.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம் பத்திப் பாடல்களிற் கையாண்ட விருத்தம் முதலிய பாவினங்களையும் பிற யாப்புக்களையும் ஆராய்ந்து இயற்றமிழ் நூலிற்கு ஏற்றவற்றைத் தெரிந்து, தம் நூலிற் பயன்படுத்தித் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஒரு புது வழியை ஆசிரியர் வகுத்துக் காட்டினமையால், அவருக்குப் பின் வாழ்ந்த கம்பர், சேக்கிழார், கச்சியப்பர் முதலிய பெரும் புலவர்களும் அவரைப் பின்பற்றி விருத்தம் முதலிய யாப்புக் களிலே தம் காப்பியங்களை இயற்றினர். தமிழிலுள்ள பேரிலக்கியங்களுள் ஒன்றகச் சீவகசிந்தாமணி யென்னும் காவியம் மதிக்கப்பட்டுவந்துள்ளது. சோழப் பெருமன்னர் காலத்திலும் அதற்குப் பின்னும் தமிழிலெழுந்த காவியங்களுக்கும் புராணங்களுக்கு ம் பொருள்மரபிலும் செய்யுள்மரபிலும் ஒரு வழிகாட்டியாக நின்ற இந்நூல், பண்டைத் தமிழிலக்கியங்களிற் காணப்படும் கவிச்சிறப்புகள் பல பொதியப்பெற்றதொன்றுகக் காணப்படுகின்றது.

சங்க நூல்களிற் காணப்படும் அகத்திணைப் பொருளமைதிகளும் உவமை யுருவகங்களும் பிறவும் காலத்திற்கு ஏற்ற வகையில் இந்நூலில் அமைக்கப்பட்டுள்ளன. தன்னிகரில்லாத் தலைவணுகிய

சீவகனுடைய பிறப்பு, வீரச்செயல், அரசியற்றிறன் முதலியவற்றை விவரித்துக்கூறுதலால், இது உலகியல் கூறும் நூல்போலக் காணப்படினும், உண்மை யில் இது சமணசமயக் கருத்துக்களையும் அச்சமயம் போதிக்கும் நெறி களையும் எடுத்துக்கூறும் நோக்கத்துடன் இயற்றப்பட்டது . என்பதை நாம் இந்நூலைப் படித்து அறிந்து கொள்ளலாம். இந்நூலிலுள்ள முத்தியிலம்பகத்தில் அச்சமயம் போதிக்கும் தத்துவங்களும் பிறவும் சிறப்பாக வரையப்பட்டுள்ளன. ஏனைய இலம்பகங்களிலும் அவை ஆங்காங்கு குறிக்கப்பட் டிருக்கும் வகையினே நோக்குமிடத்து, இந்நூலாசிரியர் தம் சமயக் கொள்கைகளே வெளிப்படுத்துவதற்கே இதனே இயற் றிஞர் என்பது தெளிவாகும். இவ்வாசிரியர் காலத்திற்குமுன் வாழ்ந்த சமண முனிவர்கள் மக்களுக்கு உலகியலில் வெறுப்பை உண்டாக்கக்கூடியவகையில் நூல்களை இயற்றியும் பிரசாரங்களைச் செய்தும் வந்தமை அச்சமயம் குன்றியதற்கு ஒரு காரணமாகும். ஆகவே, உல கியலைச் சிறப்பித்துக் கூறும் நூல் ஒன்றினை இயற்றி, அதனைத் துணைக்கொண்டு தம் சமயக் கொள்கைகளை மக்களிடையே பரப்புதல்கூடும் என்று எண்ணி இந்நூலினை ஆசிரியர் இயற்றினர் எனக் கொள்ளுதல் பிழையாகாது. இந்நூலைப் பின்பற்றி இக்காலப் பகுதியிற் சமணகாவியங்கள் மட்டுமன்றி, கம்பராமாயணம் முதலிய ஏனைச்சமய காவியங்களும் தோன்றலாயின. அவை யாவும் இலக்கியச்சுவை நிரம் பிய நூல்களாதலின், சமய பேதங்களைப் பாராட்டாது மக்கள் அந்நூல்களையெல்லாம் விரும்பிப் படித்தனர். ஆகவே, இத்தகைய நூல்கள் தமிழிலே தோன்றுதற்கு வழிகாட்டியவர் சிந்தாமணியாசிரியரெனலாம்.

காமச்சுவையை மிகுத்துக் கூறும் இலக்கியங்களுட்
சிந்தாமணி ஒன்றுகும். காதலே கவிதைக்குப் பொருளாக
அமைதல்வேண்டும் என்பது பண்டைத் தமிழ்மரபாகலின்,

அதனைத் தழுவித் திருத்தக்கதேவர் தம்நூலில் அச்சுவை யினைச் சிறப்பாக அமைத்துள்ளனர். சீவகன் பெண்கள்) மணந்த கதைகளைப் பல இலம்பகங்கள் கூறுகின்றன. அந் நூல் ஆரம்பத்திலுள்ள நாமகளிலம்பகம் அவன் கல்விபயின் றதைக் கூறுகின்றது. அச்செய்தியை உருவக வாய்பாட்டால் "ஞான மென்னுங் குமரியைப் புணர்க்கலுற்றார், என்று மேல் வரும் செய்யுளிற் கூறியிருப்பது கண்டு இன்புறற்பாலது. முழவெனத் திரண்ட திண்டோண் மூரிவெஞ்சிலையினனு மழலெனக் கனலும் வாட்க ணல்வளைத் தோழினுளு

மழலையாழ் மருட்டுங் தீஞ்சொன் மதலையை மயிலஞ் சாயற்
குழைமுக ஞான மென்னுங் குமரியைப் புணர்க்கலுற்றர்.

இவ்வாறே முத்தியிலம்பகத்திலும் சீவகன் முத்திநிலையினை அடைந்தான் என்பதைக் கூறப்போந்த புலவர், கேவல மடங்தை யென்னுங் கேழ்கிளர் நெடிய வாட்கட் பூவலர் முல்லைக் கண்ணிப் பொன்னுரு பாகமாகக் காவலன்ஞ்ஞெர் கூருக் கண்ணிமையாது, புல்லி மூவுல குச்சியின்பக் கடலினுண் மூழ்கினனே எனக் கேவலஞானத்தை ஒரு பெண் ணுக உருவகித்துக் கூறியுள்ளனர். இவ்வாறு எத்தகையபொருளைக் கூறும் போதும் காமச்சுவையினை அதனுடன் இணைத்துக்கூறும் இயல்பினை நாம் இந்நூலிலேதான் சிறப்பாகக் காணலாம், இப்புலவர், நாட்டின் லேன் கருதி ஆட்சிபுரிந்த சோழ அரசர் காலத்தில் வாழ்ந்தவராதலின் கல்வி, வீரம், ஆட்சித்திறன் முதலிய பல சிறப்புக்கள் புருந்தப்பெற்ற ஓர் அரசனுடைய வாழ்க்கையைக் கூறும் வாயிலாகக் கற்றவர் விரும்பும் கவிச்சுவையனைத்தையும் பெய்து, இறைவனே அடையும் வழியினை இந்நூலில் எடுத்துக்காட்டுகின்றனர். இத்தகையு சிறந்த நூலினைச் சோழப் பெருமன்னர்களும் அக்காலத்துப் புலவர் களும் படித்துப் பாராட்டியதில் வியப்பொன்றுமில்லை. இந் நூல் பல வழிகளிலும் ஒரு புதிய மரபினைத் தொடக்கி வைத்ததனுல்,அம்மரபு அக்காலம் தொடக்கமாக வளரலாயிற்று.

பெருங்காப்பியங்கள் ஐந்தனுள் வளையாபதி, குண்டல கேசியாகிய இருநூல்களும், சிறு காப்பியங்களுள் நாகசூமார காவியமும் இக்காலத்திற் கிடைத்தில. வளையாபதிச் செய்யும், கள் சிலவும் குண்டலகேசிச் செய்யுட்கள், சிலவும் புறத் திரட்டு, நீலகேசியுரை முதலியவற்றின்கண் வந்துள்ளன. சிறுகாப்பியங்களுள்ளே சூளாமணி ஏனையவற்றிலும் கவிச் சுவை மிக்கதொன்றும். அது சுரமை என்னும் நாட்டிலே போதன் மாநகரத்தில்வாழ்ந்த பயாபதியென்னும் அரசனுக்கு மகனுக அவதரித்த திவிட்டன் என்பானுடைய கதையைக் கூறுகின்றது.

சோழர்கால வினாவிடை நிறைவு பெறுகின்றது.
.....முற்றும் .....